DEPOSITION OF WITNESS

CHAPTER CODE OF CIVIL PROCEDURE

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT (FTC), THENI.

# OS . No. 246/2021

Deposition of Witness : PW1

| | |
|---|---|
| Name - கனிஷ்கர் | Father's Name – ஜோதி கணேசன் |
| Village\City - | Taluk- |
| Caste - | Calling - |
| Religion - | Age- |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.09.2023.

(சாட்சி அழைக்கபட்டு சத்தியபிரமாணம் செய்யபட்டார்)

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்

**3 வது பி.வா.கு.வி.:**

கேள்வி : பிரதிவாதியின் தாயாருக்கும் , உங்களுடைய தாத்தாவுக்கும் இடையில் பெரியகுளம் , கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெற்ற அசல் வழக்கு எண் 37/2009 வழக்கு விபரங்களை நீங்கள் நகல் பெற்று தெரிந்து கொண்டேனா என்றால்?

பதில் : சரிதான்.

கேள்வி : அசல் வழக்கு எண் 37/2009 வழக்கில் வாதி வெள்ளைத்தாய் வழக்குரை சொத்தின் சுவாதீனம் தன்வசம் உள்ளதாக சொல்லி ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் ?

பதில் : இல்லை.

கேள்வி : மேற்படி வழக்கில் உங்களுடைய தாத்தா வழக்குரையின் சொத்தின் சுவாதீனமானது வாதி வெள்ளைத்தாயின் வசம் உள்ளது என்று ஒப்பு கொண்டு எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் ?

பதில் : இல்லை.

கேள்வி : உங்களுக்கு தமிழ் எழுத, படிக்க தெரியுமா என்றால்?

பதில் : தமிழ் தொடர்ச்சியாக வாசிப்பது கஷ்டம். சரளமாக பேசுவேன்.

கேள்வி : இதற்கு முன் குறுக்கு விசாரணையில் வழக்குரையின் சொத்தின் சுவாதீனமானது பிரதிவாதிகளின் தாயார் வசம் உள்ளதாக கேள்வி கேட்கப்பட்டது ?

பதில் : ஆமாம்.

கேள்வி : அந்த கேள்வியின் போது அசல் வழக்கு எண் 37/2009 ன் சுவாதீனம் சம்பந்தமான கேள்விகள் கேட்கப்பட்டது ?

பதில் : சரிதான்.

கேள்வி : அ.வ.எண் 37/2009 வழக்கின் நகல்களை பெற்றுக் கொண்டு நீங்கள் தமிழ் படிக்க தெரிந்த உங்கள் தகப்பனாரிடம் சுவாதீனம் சம்பந்தபட்ட விபரங்களை கேட்டு தெரிந்து கொண்டீர்களா என்றால்?

பதில் : சரிதான்.

கேள்வி : அந்த வழக்கில் உங்கள் தாத்தா விஸ்வநாதன் தாக்கல் செய்த எதிருரையில் உள்ள சங்கதிகளை கேட்டு தெரிந்து கொண்டீர்கள் என்றால் ?

பதில் : சரிதான்.

கேள்வி : உங்கள் தாத்தா 19.06.2003 ம் தேதி அன்று அம்மாபட்டி கிராமத்தை சேர்ந்த செல்வம் என்பவரிடம் ரூ 3,75,000/– த்தில் ரூ 3,50,000/–த்தை பெற்று கொண்டு கிரைய அக்ரிமெண்ட் எண் .678/2003 செய்து கொடுத்துள்ளார் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் ?

பதில் : சரிதான்.

கேள்வி : உங்கள் தாத்தா 19.06.2003 ம் தேதி அன்று அம்மாபட்டி கிராமத்தை சேர்ந்த தனசேகரன் என்பவரிடம் ரூ 3,75,000/– த்தில் ரூ 3,50,000/– த்தை பெற்று கொண்டு கிரைய அக்ரிமெண்ட் எண் .679/2003 செய்து கொடுத்துள்ளார் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால்?

பதில் : சரிதான்.

கேள்வி : மேற்படி 2 கிரைய அக்ரிமெண்டுகளை ஒத்தி ஆவணங்களாக செல்வம் மற்றும் தனசேகரினிடம் வைத்து வட்டிக்கு பதிலாக தென்னந்தோப்புகளை அனுபவித்து வருவதற்கு சுவாதீனத்தினை கொடுத்துள்ளதாக கூறியுள்ளார் என்று சொன்னால் ?

பதில் : சரியல்ல. தேங்காயை வெட்டி செல்வதற்கு மட்டும் அனுமதித்து உள்ளார்.

கேள்வி : உங்கள் தாத்தா தேங்காய் பறிப்பதற்கு மட்டும் செல்வம் மற்றும் தனசேகரினிடம் வழக்குரை சொத்துக்களை ஒப்படைக்கவில்லை என்றும் , சொத்தின் சுவாதீனங்களில் செல்வம் மற்றும் தனசேகரன் இருந்து வருவதாக ஒப்புக் கொண்டு அந்த வழக்கில் எதிர்வாதம் செய்துள்ளார் என்றும் , நீங்கள் அதை மறைத்து பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்று சொன்னால் ?

பதில் : சரியல்ல.

கேள்வி : உங்கள் தாத்தா அ.வ.எண் 37/2009 வழக்கின் எதிருரையில் கடன்களை வாதி வெள்ளைத்தாய் பெற்றுக் கொண்டு சொத்தின் சுவாதீனத்தினை தன்னிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் அதற்காக தொகை செலுத்த தயாராக உள்ளதாகவும் எதிர்வாதத்தில் சொல்லியுள்ளார் என்றால்?

பதில் : சரியல்ல. செல்வம் மற்றும் தனசேகரினிடம் தொகை செலுத்துவதாகதான் என் தாத்தா சொல்லியுள்ளார்.

கேள்வி : உங்கள் தாத்தா அ.வ.எண் 37/2009 வழக்கில் ஒப்புக் கொண்டு தாக்கல் செய்த எதிர்வழக்குரையை இந்த வழக்கில் நீங்கள் வேண்டும் என்றே மறைத்து பொய் சாட்சியம் அளிக்கீறிர்கள் என்றால்?

பதில் : சரியல்ல.

கேள்வி : உங்கள் தாத்தாவிற்கு, உங்கள் அப்பாவிற்கும் இடையே இந்த வழக்கு சொத்து சம்பந்தமாக உத்தமபாளையம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ .வ.எண் 712/1996 என்ற வழக்கு நடைபெற்றது என்றால்?

பதில் : தெரியாது.

கேள்வி : அ.வ.எண் 712/1996 வழக்கில் வழங்கபட்ட தீர்ப்பாணையின் மேல் உங்கள் தாத்தா பெரியகுளம் சார்பு நீதிமன்றத்தில் AS.No.49/1999 என்ற மேல்முறையீட்டை தாக்கல் செய்திருந்தார் என்றால்?

பதில் : அது பற்றி எனக்கு தெரியாது.

கேள்வி : அ.வ.எண் 712/1996 , மற்றும் AS.No.49/1999 வழக்கு பற்றியும் உங்கள் தகப்பனாரிடம் விபரம் கேட்டு வந்து சாட்சி சொல்ல தயாராக உள்ளீர்கள் என்றால் ?

பதில் : என் அப்பாவிற்கு உடல்நிலை சரிவர இல்லாததால் அவரால் ஒத்துழைக்க இயலாது.

குறுக்கு விசாணை வேண்டுக்கோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு , சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு , அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 02.09.2023 அன்று சனிக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

S GOPINATHAN Digitally signed by S GOPINATHAN Date: 2023.09.02 17:28:16 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி. தேனி.
02.09.2023.